DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.321/2025**

Deposition of witness for Prosecution அ.சா.1

| | | |
|---|---|---|
| பெயர் | : | திருநாவுக்கரசு |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | நாகலிங்கம் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 08.07.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேக்காரைக்குடியில் வசித்து வருகிறேன். கடந்த 05.09.2025 ம் தேதி இரவு மேக்காரைக்குடியில் உள்ள ஆதிகற்பக விநாயகர் கோவிலை பூட்டிவிட்டு சென்றேன். மறுநாள் 06.09.2025 ம் தேதி காலை வந்து பார்த்தபோது முன்கேட்டு பூட்டியபடி இருந்தது, ஆனால் பின்பக்கம் கம்பியை வளைத்து உள்ளே இறங்கியிருக்கிறார்கள். கோவில் உண்டியலில் இருந்த சுமார் ரூ.5000/- மற்றும் கோவிலில் உள்ள அருவாள் ஆகியவவை காணாமல் போயிருந்தது. இது சம்பந்தமாக போலீசில் புகார் கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் புகார் நான்

கொடுத்ததுதான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். (**மேற்படி புகார் அ.சாஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**) போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை (1 ம் எதிரி தரப்பு வழக்கறிஞரால் இந்த குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது)</u>**

புகாரை யார் எழுதினார்கள் என்றால் நான் எழுதவில்லை, என்னுடன் வந்தவர் எழுதினார். சம்பவத்தை நான் நேரடியாக பார்த்தேனா என்றால் இல்லை. உண்டியல் பூட்டியிருந்ததால் அதில் எவ்வளவு பணம் இருந்தது என்று குறிப்பிட்டு சொல்லமுடியாது என்றால் ஒவ்வொரு வருடமும் உண்டியலில் ரூ.5000/-க்கு குறையாமல்தான் பணம் இருந்தது. புகாரில் என்ன உள்ளது என்று எனக்கு முழுமையாக தெரியாது என்று சொன்னால் நான் நடந்த விபரங்களை எழுதுவதற்காக சொன்னேன். புகாரை எழுதிய பின்பு எனக்கு படித்து காண்பித்தார்களா என்றால் படித்து காண்பித்தார்களா என்று எனக்கு ஞாபகமில்லை.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.321/2025**

Deposition of witness for Prosecution அ.சா.2

| | | |
|---|---|---|
| பெயர் | : | கருப்பனன் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | முத்தழகு |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 08.07.2026

எதிரிகள் ஆஜர்

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது மேக்காரைக்குடியில் வசித்து வருகிறேன். கடந்த ஒரு மாதத்திற்கு முன்பு மேக்காரைக்குடியில் உள்ள பிள்ளையார் கோவில் உடைக்கப்பட்டிருந்தது. நான் காலை 8.00 மணிக்கு போய்ப் பார்த்தேன். கம்பியை வளைத்து கோவிலுக்கு சென்று உண்டியலை உடைத்து பணம் காணாமல் போயிருந்தது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**2 ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை (1 ம் எதிரி தரப்பு வழக்கறிஞரால் இந்த குறுக்கு விசாரணை ஏற்றுக்கொள்ளப்படுகிறது)**

நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். சம்பவம் ஒரு மாதத்திற்கு முன்புதான் நடந்ததா என்றால் ஆமாம்.

**<u>மறு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,

DEVAKOTTAI

**CC.No.321/2025**

Deposition of witness for Prosecution அ.சா.3

| | | |
|---|---|---|
| பெயர் | : | செல்வகணபதி |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | சுப்பையா |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 08.07.2026

எதிரிகள் ஆஜர்

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கீழகாவனவயலில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது, நான் அவர்களை பார்த்ததே இல்லை. எங்கள் கோவில் உண்டியலில் திருடுபோனது சம்பந்தமாக புகார் கொடுக்க காவல் நிலையத்திற்கு சென்றிருந்தோம். ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது இல்லை. கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது இல்லை.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன்பேரில் இந்நீதிமன்றம் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

கடந்த 18.09.2025 ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தபோது கடந்த 10.09.2025 ம் தேதி காலை 7.10 மணிக்கு போரிவயல் கண்மாய் வழியாக வந்ததாகவும் அப்போது 1வது எதிரி அறிவுக்கண்ணன் என்கிற குருவிக்கண்ணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும் அதில் அனுமதிக்கப்பட்ட பகுதியின் அடிப்படையில் மீதி பணம் ரூ.650/- எதிரி எடுத்து கொடுத்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியதாகவும் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.

DEPOSITION OF WITNESS
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

**CC.No.321/2025**

Deposition of witness for Prosecution அ.சா.4

| | | |
|---|---|---|
| பெயர் | : | சுரேஷ் |
| தகப்பனார்/கணவர் பெயர் | : | ராக்கப்பன் |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |
| தொழில் | : | |
| வயது | : | |

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 08.07.2026

எதிரிகள் ஆஜர்.

சாட்சி சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

**முதல் விசாரணை:**

நான் தற்போது கீழகாவனவயலில் வசித்து வருகிறேன். எதிரிகளை தெரியாது. எனக்கு வழக்கை பற்றி எதுவும் தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்தும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்தும் என்னுடையதுதான். **(மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து அ.சாஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) (மேற்படி கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து அ.சாஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசுத் தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவிக்கக் கோரி அனுமதி கேட்டதன்பேரில் இந்நீதிமன்றம் அனுமதி வழங்கப்பட்டது.)**

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

கடந்த 18.09.2025 ம் தேதி தேவகோட்டை தாலுகா காவல் நிலைய சார்பு ஆய்வாளர் விசாரணை செய்தபோது கடந்த 10.09.2025 ம் தேதி காலை 7.10 மணிக்கு போரிவயல் கண்மாய் வழியாக வந்ததாகவும் அப்போது 1வது எதிரி அறிவுக்கண்ணன் என்கிற குருவிக்கண்ணன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்ததாகவும் அதில் அனுமதிக்கப்பட்ட பகுதியின் அடிப்படையில் மீதி பணம் ரூ.650/- எதிரி எடுத்து கொடுத்து சார்பு ஆய்வாளர் கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்து கைப்பற்றியதாகவும் கூறிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை: இல்லை</u>**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

S/d..D.Poornima, B.A.,B.L(Hons).,L.L.M.,
குற்றவியல் நடுவர்,
தேவகோட்டை.